
# சிறுவர்

# அமுதம்

19.03.98


எண்ணம் .9 கிண்ணம்.3



சிறுவர் இலக்கிய மாத சஞ்சிகை


Kinder literarisches Magazin

# அதிசயங்களும் அழிவுகளும்:



உலக அதிசயங்கள் பழையவை, புதியவை என்று வரலாற்றாசிரியர்கள் பிரித்துச் சொல்வார்கள். வரும் புதிய கண்டு பிடிப்புக்கள் எல்லாமே புதிய கண்டு பிடிப்புக்கள் தான். ஆனாலும் கடந்த காலக் கண்டு பிடிப்புகளுள்ளும் இக் காலத்திலும் பேசப்படும் உலக அதிசயங்கள் ஏழு. அவையாவன:

பபிலோன் நகரத்துத் தொங்குதோட்டம்
எபேஸ் நகரின் டயானா தேவதைச் சிலை
ரோட்ஸ் தீவின் சூரியனின் சிலை.
ஒலிம்பியாவின் ஜீயாஸ் தேவதையின் சிலை.
பரீஸ் நகரின் கலங்கரை







விளக்கம்.
எகிப்தின் பிரமிட்டுக்கள்.
மோசலஸ் மன்னனின் கல்லறை.

இவற்றுள் எகிப்திய பிரமிட்டுகள் தான் இப்பொழுதும் இருக்கின்றன. இவை 5000 ஆண்டுகளுக்கு முன் கட்டப்பட்டவை. இந்தப் பிரமிட்டுக்களில் மிகவும் பெரியது கீஜா என்னும் கிராமத்தில் இருக்கின்றது. இதனது உயரம் 481 அடி ஆகும்.


பபிலோன் நகரத்துத் தொங்கு தோட்டம் 2500 ஆண்டுகளுக்கு முன்பே, நேபுகத் மன்னனின் படையெடுப்பால் அழிந்து விட்டது. மோசலஸ் மன்னனின் கல்லறையின் மீது கட்டப்பட்ட 100 அடி உயரமுள்ள நினைவுச்சிலை





அலெக்ஸ்சா
ண்டரின்
படையெடுப்ப
ால் அழிந்து
விட்டது.
டயானா
தேவதையின் சிலை 60 அடி உயரமுள்ள செங்குத்தான தூண் மீது அமைக்கப்பட்டது. இச்சிலையும் கோத்ஸ் என்னும் அரசனின் படையெடுப்பால் அழிந்து விட்டது.

ரோட்ஸ் தீவின் கலங்கரை விளக்கத்தின் மேல் இருந்த சூரியனின் சிலை பூமி நடுக்கத்தால் அழிந்து விட்டது.
ஒலிம்பியா
வில்
அமைந்தி
ருந்த40
அடி
உயரமான
ஜீயாஸ்
தேவதையி
ன் சிலை
தங்கத்தா
ல்



செய்தது. பொன்னாலான ஆடைகளைக் கொண்டிருந்தது. கண்களுக்கு வைரக்கற்கள் பதிக்கப்பட்டிருந்தன. மத வெறியர்களால் இச்சிலை தகர்க்கப்பட்டது. 400 அடி உயரமானதும், சலவைக்கல்லினாலான பரீஸ் நகரத்துக் கலங்கரை விளக்கமும் நிலநடுக்கத்தில் அழிந்து விட்டது.



---

## கைவேலைகளும் முக்கிய இடங்களும்:

கூடை பின்னுதல்- இங்கிலாந்து
நெசவு செய்தல் - மெக்சிக்கோ
நகை செய்தல் - ஆபிரிக்கா
ஆடைகளுக்கு வர்ணம் தீட்டுதல்- மெறோக்கோ
கண்ணாடிப் பொருட்கள்-வெனிசூலா
கம்பளம் நெய்தல் - துருக்கி
வெண்கலப்பொருட்கள்வனைதல்- நியூமெக்சிக்கோ
கம்பளி நெசவு- கிறீன்லாந்து

-கபிலன் பரமசிவம்-

## சொற்களைக் கண்டு பிடியுங்கள் முடிவு

*இட-வல*

அஞ்சலி
சலி
கனல்
திடல்
புவனம்
வனம்
நாட்டாமை
பரி
காற்று
சேய்
புன்னை
தரி
தள்ளி
பாவலன்
அலகு
தட்டில்
மடி
நாசம்
தீது

*வல-இட*

காதல்
புலி
வைகறை
கயல்
திணை
வறுமை
சேறு
காப்பு
புரி
பண்
தெரி
தண்
தண்டனை
பாவி
விளி
சுளகு
அடை
பசு
பசுமை
மைல்
தீபம்
நாடி

*மே-கீழ்*

அனு
அனுப்பு
புண்
புண்ணியம்
கணை
பதி
பதிவு
கடி
புதன்
புயல்
அடி
பாகு
தவளை
வளை
சேரி
காலம்
தென்றல்

*கீ-மேல்*

மனம்
கனவு
நாதன்
தன்
சட்டை
அளி
பல்
பல்லவி
கதை
தீமை
பாண்
புகல்
கல்
தெய்வம்
பலதடவை
வந்த
சொற்கள்
புதையல்
தையல்
தை
கறை
மை
பா (பாட்டு)
பல்
தீ
வை
கை
நா (நாக்கு)
கா(நந்தவனம்)
புரி
தா
பசு
சேறு

எழுதியவர்கள்:

| | |
|---|---|
| 1.முகுந்தன் மகேந்திரன் | Berg.gladbach |
| 2.ஜெயமாலா இரத்தினசபாபதி | Eschelbronn |
| 3.ஜெயதீபா இரத்தினசபாபதி | Eschelbronn |
| 4.மோகன் இரத்தினசபாபதி | Eschelbronn |
| 5.ஜெயானந்தன் கண்ணன் | Berg.gladbach |
| 6.மகிழினி பரமசிவம் | Düseldorf |
| 7.தனுஜா மாசிலா | Saarbrücken |
| 8.சுஜீனா சண்முகலிங்கம் | Clausthal |
| 9.ஸ்ரீவாணி ரவிக்குமார் | Danmark |
| 10.ஆர்த்தி புஸ்பராஜ் | Schweiz |

++++++++++++++++++++++++++++++++++++++++

மதங்களின் பெயரால் சண்டையிட்டுக் கொள்வது மதங்களையே அவமதிக்கும் செயலாகும்.

-இரவீந்திரநாத் தாகூர்-

++++++++++++++++++++++++++++++++++++++++

++++++++++++++++++++++++++++++++++++++++

ஒரு ஆண்டிற்குள் ஒரு நல்ல நண்பனைப் பெற்று விட முடியாது. ஆனால் ஒரு மணி நேரத்தில் ஒரு நல்ல நண்பனை இழந்து விட முடியும்.


-சீனப்பழமொழி-

++++++++++++++++++++++++++++++++++++++++

# சைவ சமயத்தின் பெருமை

சைவ சமயத்தின் பெருமைக்கு, அதன் கோயில்கள், தெய்வீக நூல்கள், அருளாளர்கள் என்னும் மூன்றும் சிறந்த ஆதாரங்களாம். சைவ சமயத்தில் தேவாரப் பாடல் பெற்றனவும், 1300 ஆண்டுகளுக்கு முற்பட்டனவுமாகிய தலங்களில் கோயில்கள் 274 உள்ளன. அவற்றுள் ஒவ்வொரு தலத்துக்கும் கோயிலுக்கும் தனித்தனியாக பல சிறப்பியல்புகள் உண்டு. அக் கோயில்களில் கட்டிடக்கலை, சிற்பக்கலை, முதலியன சிறப்பு வாய்ந்தவை.

அக் கோயில்களில் இசை, நடனம், நாட்டியம், நாடகம், ஓவியம் முதலிய கலைகள் வளர்ந்து வருகின்றன. பஞ்சபூதத் தலங்கள், அட்ட வீரத் தலங்கள், சப்தவிடங்கத் தலங்கள், ஆறுபடை வீடுகள், கனகசபை முதலிய பஞ்சசபைக் கோயில்கள் ஆகியவை மிகவும் சிறப்புடையவை. அவற்றிற்கு வரலாறுகளும், இலக்கியங்களும், பாரம்பரியப் பெருமைகளும் உண்டு.




தமிழ் நாட்டில் சைவ சமயத்தில் பன்னிரண்டு திருமுறைகள் என்னும் பெயரில் பல்லாயிரக் கணக்கான தெய்வீகப் பாடல்கள் உள்ளன. அவைகளை விடவும் பட்டினத்தார், அருணகிரிநாதர், தாயுமானவர், இராமலிங்கர், பாம்பன் சுவாமிகள் போன்ற ஞானிகளும், அருளாளர்களம் பாடிய பாடல்கள் ஆயிரக் கணக்கில் அமைந்திருக்கின்றன. தேவார, திருவாசகத் திருமுறைகள், உலகிலேயே சிறந்த பக்தி இலக்கியங்களாக மதித்துப் போற்றப் படுகின்றன. இவற்றுள் திருவாசகம் ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கப் பட்டுள்ளது.

பெரிய புராணம் போன்ற சிறந்த அடியார் வரலாற்று நூல், அழகிய கவிதைகளுடன் அழியாத நிலையில் வேறு பிற சமயங்களில் இருப்பதாகத் தெரியவில்லை. ஜேர்மனி நாட்டவரான, "கில்டா வியார்தோ" என்ற அறிஞர் சைவ சித்தாந்தத்தை 444 பக்கங்களில் மிகவும் சிறப்பாக மொழிபெயர்த்து இருக்கிறார். அது மட்டுமல்லாமல் காரைக்காலம்மையார், சேக்கிழார், மாணிக்கவாசகர் ஆகியோரது பாடல்களையும், ஜேர்மன் மொழியில் மொழிபெயர்த்து இருக்கிறார் கில்டா வியார்தோ.

விநாயக புராணம், சிவஞான சித்தியார், பாகவதபுராணம் போன்ற பக்தி நூல்களும் இவரால் ஜேர்மன்மொழியில் மொழிபெயர்க்கப் பட்டுள்ளமை குறிப்பிடத் தக்கதாகும்.

-முகுந்தன் மகேந்திரன்.-

# எத்தனை வைரங்கள்



ஒரு செல்வந்தரிடம் நிறைய வைரங்கள் இருந்தன. அவரிடம் நிறைய வைரங்கள் இருப்பது எல்லோருக்கும் தெரியும். வெளிநாட்டில் இருந்த வியாபாரி ஒருவன் வைரங்களைத் தனதாக்கிக் கொள்ள எண்ணினான். அதற்காக ஏழு திறமையான திருடர்களை செல்வந்தரின் வீட்டுக்கு அனுப்பினான். அவர்கள் ஒருவரை ஒருவர் அறிந்திருக்கவில்லை. ஆனாலும் ஒரேசமயத்தில் அவர்கள் குறிப்பிட்ட இடத்தை அடைந்தார்கள்.

ஏழுபேருமே தாங்கள் வைரத்தைத் திருட வந்தவர்கள் தான் என்பதை அவர்கள் எல்லோருமே அறிந்து கொண்டனர். திருடர்களில் ஒருவன் "எல்லோருமே ஒரே நோக்கத்துக்காக வந்தவர்கள் தான். ஆனபடியால் ஒன்றாகவே செயலாற்றுவோம். ஒவ்வொரு அறைகளுக்குள்ளும் ஒன்றாக நுழையாமல் தனித்தனியாகவே செயல்படுவோம்." என்று மற்றத் திருடர்களிடம் கூறினான்.

இன்னொரு திருடன், "அது எப்படிச் சாத்தியமாகும்." என்றான். அதற்கு முதலில் பேசியவன் "ஏதோ ஒரு அறையிலேயே வைரங்கள் இருக்கும். யாருக்குக் கிடைத்தாலும் சமமாகப் பங்கிட்டுக் கொள்வோம் என்றான். அதற்கு எல்லோரும் ஒப்புக் கொண்டார்கள். எல்லோரும் உள்ளே நுழைந்தபோது, ஏழு அறைகள் இருந்தது அவர்களுக்கு ஆச்சரியமாக இருந்தது. ஏழுபேரும் ஒவ்வொரு அறைக்குள் சென்றனர்.

திருடர்கள் திருட வந்திருப்பதைக் காவலர்கள் அறிந்து கொண்டனர். அவர்கள் போட்ட சத்தத்தில் திருடர்கள் தப்ப முயற்சித்தனர். ஆனாலும் திருடர்களில் ஒருவன்

வைரங்களைக் கைப்பற்றிக் கொண்டான். எல்லோரும் ஒவ்வொரு பக்கமாகத் தப்பி ஓடினார்கள். வைரங்களுடன் ஓடியவன் ஆலமரமொன்றின் பின் நின்று இளைப்பாறினான். பின் வைரப்பெட்டியைத் திறந்து வைரங்களை எண்ணத் தொடங்கினான்.

எண்ணிக் கொண்டிருக்கும் பொழுது இன்னொரு திருடனும் அங்கு வந்து சேர்ந்தான். "வைரங்களில் எனக்கும் பங்குண்டு அல்லவா? எனக்கும் கொடு." என்றான். வைரத் திருடனும் ஒப்புக் கொண்டான். சமமாகப் பங்கிட்டனர். ஒரு வைரம் மீதியானது. வைரப் பெட்டியைத் தூக்கிக் கொண்டு வந்ததால் அது தனக்குச் சேர வேண்டும்." என்று வைரத்திருடன் கூறினான். மற்றத் திருடன் இதை ஒப்புக் கொள்ளவில்லை.

இரண்டு திருடர்களும் சண்டை போட்டுக் கொண்டிருந்தபோது மூன்றாவது திருடன் வந்தான். வைரங்கள் மூன்றாகப் பங்கிட்டார்கள். அப்போதும் வைரம் மிஞ்சியது. குழப்பத்தில் இருந்த வேளையில் நாலாவது திருடன் வந்தான். வைரம் நான்காகப் பங்கிட்டார்கள். அப்பொழுதும் வைரம் ஒன்று மிஞ்சியது. அதனால் ஐந்தாகப் பங்கிட்டார்கள்.

அப்பொழுதும் வைரம் ஒன்று மிஞ்சியது. அதேவேளையில் இரண்டு திருடர்கள் வந்தார்கள். வைரம் ஆறாகப் பிரிக்கப் பட்டது. அப்போதும் ஒரு வைரம் மிஞ்சியது.

ஏதோ விதமாக ஏழாவது திருடனும் வந்தான். வைரங்கள் ஏழாகப் பிரிக்கப்பட்டன. ஆச்சரியம் தான்!. வைரங்கள் சமபங்காகின. எல்லாத் திருடர்களும் சந்தோஷத்துடன் சென்றார்கள்.

*பெட்டியில் இருந்த வைரங்கள் எத்தனை?*
*ஒவ்வொரு திருடனும் பெற்றுக் கொண்ட வைரங்கள் எத்தனை?*

*சரியான விடை எழுதியவர்களுள் அதிஷ்டசாலிக்குப் பரிசு உண்டு.*



# கிடைப்பதில் பாதி



கிருஷ்ண தேவராயருடைய அரண்மனையில் விகடமவியாக தெனாலிராமன் இருந்தான். அவனது செயல:கள் சிரிப்பை வரவழைக்கும். சில வேளைகளில் எல்லை மீறிக் கோபத்தையும் வரவழைத்து விடும். சில காலமாக அவனது விகடங்கள் எல்லை மீறிவிட்டதால் அரசரான கிருஷ்ணதேவராயர் அரண்மனைக்குள் நுழையக் கூடாது என்று உத்தரவு போட்டு விட்டார். அது மட்டுமல்லாமல் நுழைந்தால் பத்துக் கசையடி தண்டனையாகக் கிடைக்கும் என்றும் சொல்லியிருந்தார்.

தெனாலிராமனுக்குப் பொழுதே போகவில்லை. அரண்மனைக்குள் இருந்தால் சுலபமாகப் பொழுது கழிந்து விடும். நாள்தோறும் அரசர் தரும் சன்மானம் குடும்பத்தை நடத்திச் செல்ல உதவியது. வீட்டில் மனைவி பணமுடை

காரணமாகத் "தொணதொண"க்கத் தொடங்கி இருந்தாள். அரண்மனைக்குள் எப்படியாவது நுழைந்து விட்டால்.............., பின் மன்னரைச் சமாதானப்படுத்தி விடலாம். இவ்வாறு யோசித்துக்கொண்டு நடந்தான்.

அரண்மனைச் சேவகன் ஒருவனிடம் இருந்து பக்கத்து நாட்டிலுள்ள திறமை வாய்ந்த நாடகக்குழு ஒன்று, நாடகம் நடத்த அரண்மனை விருந்தினர் விடுதியில் தங்கியிருப்பதையும் அறிந்து கொண்டான். நாடகம் பார்க்கும் ஆவலை விடவும், இந்தச் சந்தர்ப்பத்தைத் தான் பயன் படுத்திக் கொள்ள இராமன் எண்ணினான். நாடகம் நடக்கும் நாளையும் அறிந்து கொண்டான்.

நாடகம் பார்ப்பதற்காகக் கூட்டம் அலை மோதிக் கொண்டிருந்தது. கூட்டத்தோடு தெனாலிராமனும் நுழைந்து விட முயன்றான். வாயில்காவலர்களுக்கு முன்பே சொல்லி இருந்தபடியால் காவலர்களும் நோட்டம் பார்த்துக் கொண்டிருந்தனர். அவர்களில் ஒருவன் இராமனைக் கண்டு கொண்டான். அவனைப் பிடித்தும் கொண்டான். உள்ளே நுழைய முடியாதநிலையில் இராமன் அவதிப்பட்டான்.

காவலனிடம், "அண்ணே, அரசர் எனக்குத் தரும் சன்மானத்தில் பாதியை உனக்குத் தருவேன். என்னை உள்ளே போகவிடு." என்றான். இராமன்

என்ன செய்தாலும், இராமனுக்கு அரசரிடம் உள்ள செல்வாக்கு எல்லோரும் அறிந்ததே!. என்று யோசித்த காவலன் இராமனிடம் சத்தியம் வாங்கிக் கொண்டு உள்ளே செல்ல அனுமதித்தான். உள்ளே சென்ற இராமனை நாடக மண்டபத்துக் காவலாளியும் உள்ளே விட மறுத்தான். அவனிடமும் முதற் காவலாளிக்குக் கூறியது போலவே, தனக்குக் கிடைப்பதில் பாதியைத் தருவதாகக் கூறவே, அவனும் உள்ளே அனுமதித்தான்.

இராமன் உள்ளே சென்றபோது, கிருஷ்ணன் கோபிகைகளோடு குறும்புகள் செய்யும் காட்சி நடைபெறத் தொடங்கி இருந்தது. நாடகம் நடைபெறும் இடத்துக்குச் சென்ற இராமன் அங்கிருந்த பெண்களின் ஆடைகளில் ஒன்றை எடுத்து அணிந்தான். பெண் வேடம் அவனுக்குப் பொருத்தமாக இருந்தது. கையில் ஒரு கம்பையும் எடுத்துக் கொண்டான். குறும்பு செய்யும் கிருஷ்ணனை, கோபிகைகள் தங்கள் கையிலுள்ள மத்தினால் அடிப்பது போல பாவனை காட்டி ஆடிக் கொண்டிருந்தனர்.

இதுதான் சமயம் என்று இராமன் மேடையில் ஏறிக் கொண்டான். கோபியரோடு ஒருத்தியாகச் சேர்ந்து தடியால் கிருஷ்ணன் வேடமிட்டவனுக்கு நன்றாக அடித்தான். வலி தாங்க முடியாமல் அவன் “ஐயோ,ஐயோ” என்று அலறினான். நாடகம்

பாதியிலேயே நிறுத்தப்பட்டு விட்டது. தெனாலிராமனின் வேடமும் கலைக்கப்பட்டது. தனது கட்டளையை மீறியது மட்டமன்றி, வெளிநாட்டவரை அவமானப்படுத்தியதும் சேர்ந்து அரசருக்கு மிகுந்த கோபத்தை உண்டாக்கியது.

தெனாலிராமன் சிறையில் அடைக்கப்பட்டான். பின் விசாரணைக்குக் கொண்டு வரப் பட்டான். தான் செய்த தவறுகளைத் தெனாலிராமன் ஒப்புக் கொண்டான். அவனுக்குரிய தண்டனை இரட்டிப்பாக வழங்க முடிவு செய்யப்பட்டது. அப்போது தெனாலிராமன் அரசரைப் பார்த்து, "அரசே, நீங்கள் அளிக்கும் தண்டனையை நான் ஏற்றுக் கொள்ள வேண்டியவன் தான். ஆனால் எனக்குக் கிடைப்பதை இருவருக்குப் பாதிபாதியாகத் தருவதாக வாக்குக் கொடுத்திருக்கின்றேன். அவர்களுக்குத் தண்டனையைப் பங்கிட்டுக் கொடுக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்." என்றான்.

அரசருக்குக் கோபத்தோடு சிரிப்பும் வந்தது. சிரிப்பைக் காட்டாமலே விஷயத்தைக் கேட்டார். நடந்தவற்றை இராமன் கூறினான். அரசர் உட்பட எல்லோருமே சிரித்து விட்டனர். இராமன் விடுதலை செய்யப்பட்டான். தனக்கு உதவிய காவலாளிகளுக்கு மன்னிப்பு வழங்கும்படியும் கேட்டான். அவர்களும் மன்னிக்கப்பட்டார்கள். தெனாலிராமன் திரும்பவும் அரண்மனை விகடகவியானான்.

# வண்ணத்துப்பூச்சி



வண்ண வண்ணப் பூச்சியாம்!
வண்ணத்துப் பூச்சியாம்!

உண்ணும் கொஞ்சம் தேனையாம்!
உயர உயரப் போகுமாம்!

இன்னும் கொஞ்சம் வேணுமாம்!
இறங்கி வந்தே பாடுமாம்!

சின்னப் பூவும் சிரிக்குமாம்!
தேனும் உண்ணக் கொடுக்குமாம்.

-புதுவை சந்திரகிரி-

## சார்லி சப்ளின்

முதலில் பயணம் செய்த ஒலிம்பிக் கப்பலிலேயே சார்லி லண்டனுக்குப் பயணமானார். முன்பு கிடைத்த வரவேற்பு இப்பொழுதும் கிடைக்குமா? என்ற ஏக்கத்துடனும் ஒருவித பயத்துடனும் கப்பலில் சென்று கொண்டிருந்தார் சார்லி. "சிற்றி லைற்" படத்தைத் திரையிடுவதற்காகவே இம்முறை லண்டனுக்குப் பயணம் புறப்பட்டிருக்கிறார். ஏமாற்றத்தைத் தந்து விட்டால்.......... . அதுதான் அவருக்குப் பயத்தை வரவழைத்தது.

அங்கு சிற்றிலைற் வரவேற்புடன் திரையிடப்பட்டு அரங்கேறியது. சார்லிக்குண்டான மகிழ்ச்சிக்கு அளவில்லை. படத்தை எடுத்துக் கொண்டு ஐரோப்பிய நாடுகளுக்குச் சுற்றினார். கை மேல் பலன் தான். சுவீஸ்சலாந்தில் சகோதரரான சிட்னியைச் சந்தித்தார். இருவருமாக இலங்கை, சிங்கப்பூர், ஜப்பான் போன்ற இடங்களுக்குச் சென்றனர். பின் அண்ணனைப் பிரிந்து சார்லி அமெரிக்காவுக்குப் புறப்பட்டார். அமெரிக்காவுக்கு வந்த வேளையில் சிற்றிலைற் படம் எட்டு மில்லியன் டொலர் சம்பாதித்துக் கொடுத்திருந்தது.



பாலட் கொடாருடன் சார்லி
(திருமணத்தின் பின்)



"மாடர்ன் டைம்ஸ்" படத்தில் பாலட் கொடாருடன்
(1936)

வெற்றிக் களிப்படன் மாளிகை திரும்பிய சார்லிக்குச் "சப்"பென்றிருந்தது. நாற்பது அறைகள் கொண்ட மாளிகையில், எவ்வளவு சம்பாதித்திருந்தால் என்ன? வாழ்க்கையில் பிடிப்பில்லாத போது........ சார்லியின் மனம் ஊமையாக அழுதது. எத்தனையோ வெளிநாடுகளில் எத்தனையோ பெண்களைக்

கண்டிருந்தும் சார்லியின் மனத்தை எந்தப் பெண்ணும் ஈர்த்துக் கொள்ளவில்லை.

இக்கால கட்டத்தில், படகுவீட்டு விருந்தொன்றில் சார்லி கலந்து கொண்டார். அங்கு பாலெட் கொடார் என்னும் பெண்ணைச் சார்லி சந்தித்தார். அவள் படத் தயாரிப்பில் ஈடுபட விரும்புவதாகச் சார்லியிடம் தெரிவித்தாள். "உன்னிடம் உள்ள பணம் படம் தயாரிக்கப் போதுமா?" என்று சார்லி கேலி செய்தார் சார்லி. பின் தன் புதிய படமான "மார்டன் ரைம்ஸ்" படத்தின் கதாநாயகியாக ஒப்பந்தம் செய்து கொண்டார்.

பின் அவள் சார்லியின் மனைவியானாள். ஆனாலும் சார்லியின் வாழ்க்கையில் எதுவும் மாற்றங்கள் நிகழ்ந்து விடவில்லை. இதற்கிடையில் சார்லியின் படங்களை ஜேர்மனி அரசு தடை செய்தது சார்லிக்கு அதிர்ச்சியைத் தந்தது. அதற்காக ஜேர்மனி அரசு கூறிய காரணங்கள் ஆச்சரியத்தைத் தந்தது.

-தொடரும்-

++++++++++++++++++++++++++++++++++++++++

ஒருவனின் சாதாரணச் செலவுகள் அவன் வருவாயில் பாதி அளவில் தான் இருக்க வேண்டும். -பேகன்-

++++++++++++++++++++++++++++++++++++++++

# விளக்கு எதற்காக?



முல்லா நண்பர்களுடன் பேசிக் கொண்டிருந்தார். பேச்சு கண்பார்வையின் பக்கம் திரும்பியது. வயது காரணமாக நண்பர்களுக்குக் கண்பார்வை குறைந்து விட்டிருந்தது. முல்லாவுக்குக் கண்பார்வை குறைவு ஏற்படவில்லை. முல்லாவுக்குப் பெருமை பிடிபடவில்லை. எங்கு சென்றாலும் தன் கண் பார்வையைப் பற்றிப் பெருமையாகப் பேசுவார். எந்த அமாவாசை இருளாயினும் தனக்கு வெளிச்சம் தேவையில்லை என்று அடித்துச் சொல்லுவார்.

முல்லாவை எப்படியாவது மட்டந்தட்டிவிடச் சில இளைஞர்கள் தருணம் பார்த்துக் கொண்டு இருந்தார்கள். ஒருநாள் முல்லாவின் மனைவி அடுத்த

தெருவில் இருக்கும் உறவினர் வீட்டுக்குச் சென்றிருந்தாள். பேசிக் கொண்டிருந்ததில் நேரம் போனது தெரியவில்லை. மாலை நேரம் கழிந்து இரவாகியும் விட்டது. மனைவியைக் காணாததால், முல்லா மனைவியைத் தேடிக் கொண்டு அடுத்த தெருவுக்குப் புறப்பட்டார்.

இருட்டில் வெளிச்சம் இல்லாமல் போக முடியுமா? கையில் லாம்பும் கொண்டு முல்லா புறப்பட்டார். வழியில் இளைஞர்கள் இருவர் வந்து கொண்டிருந்தனர். அவர்கள் முல்லாவிடம், "இரவிலும் கண்பார்வை நன்றாகத் தெரியுமே உங்களுக்கு! ஏன் விளக்கையும் கொண்டு வருகிறீர்கள்? என்று கிண்டலாகக் கேட்டார்கள். முல்லாவுக்கு அவர்கள் தம்மைக் கிண்டல் செய்வது புரிந்தது.

அவர்களை வாயடைக்கச் செய்துவிட எண்ணினார். அவர்களைப் பார்த்து, "என் கண்பார்வை இரவிலும் தெரியக் கூடியதுதான். ஆனால் எதிரில் வருபவர்களுக்குக் கஷ்டமாக இருக்குமல்லவா! விளக்கு இருந்தால் வருபவர்கள் என்மீது மோதிக் கொள்ள மாட்டார்கள் அல்லவா. அதற்காகத்தான் விளக்கை எடுத்து வந்தேன்." என்றார் சிரித்துக் கொண்டே.

முல்லா சமாளித்தே பேசுகின்றார் என்றாலும், அவருடைய சாதுர்யமான பேச்சினால் எல்லோரையும் கவர்ந்து விடுகிறாரே! முல்லா முல்லாதான் என்று பேசியவாறே இளைஞர்கள் வழி நடந்தார்கள்.

## நோய் தீர்க்கும் மருந்து.



உயிரினங்கள் எப்போது தோன்றியதோ, அதன் முடிவும் அப்போதே ஆரம்பமாகி விட்டது. விலங்குகள், மனிதர்கள் எல்லாமே தோற்றமும், முடிவும் கொண்டவை. தொடக்ககால உயிரினங்கள் பூகம்பம், கடும்மழை போன்றவற்றால் அழிவுற்றன. மனித வளர்ச்சியிலும் அவ்வாறே அழிவுகள் தொடக்க காலத்தில் ஏற்பட்டிருக்கும். தன்னை அழிவில் இருந்து காப்பாற்றிக் கொள்ள மனிதர்கள் எவ்வளவு

முயன்றிருப்பார்கள். இயற்கை அழிவுகள் ஒருபுறம் இருக்க, நோய்கள் என்னும் கொடிய அரக்கனிடம் இருந்து தன்னைக் காப்பாற்ற மனிதன் எவ்வளவு முயற்சி எடுத்திருக்க வேண்டும்.

ஆதி மனிதன் நோயால் அவதிப் பட்டதில்லையா? அவதிப்பட்டான். நோயினின்றும் தன்னைப் பாதுகாக்கும் வழிகளையும் ஆராயத் தொடங்கினான். அதுவே படிப்படியாக வளர்ச்சி அடைந்து இன்றைய மருத்துவத்தைக் கண்டிருக்கிறது. இன்றைய வைத்தியமுறைகளைக் கண்டறிய மனிதன் எவ்வளவு கஷ்டத்தை அனுபவித்திருப்பான். இன்றும் மருந்துகள் கண்டு பிடிக்கப்படாமல் எத்தனை நோய்கள் இருக்கின்றன. புதிய நோய்கள் தோன்றுகின்றன.

கீழைத் தேசங்களான இந்தியா, இலங்கை, சீனா போன்ற நாடுகளில் பச்சிலை வைத்தியம், சித்த வைத்தியம் போன்ற முறைகளால் காயங்கள், எலும்பு முறிவு போன்றவைகள், உடலில் ஏற்படும் கோளாறுகள் உட்பட மாற்றியிருப்பதை

வரலாறுகளும், பழைய நூல்களில் இருந்தும் அறிய முடிகின்றது. ஆனாலும் சீனநாட்டையே மேலைநாட்டினர் முக்கியப் படுத்திக் கூறுவார்கள். கி.மு 3000 ஆண்டளவில் சீன வைத்தியமுறைகள் மேலைநாட்டினரால் அறியப்பட்டிருந்தது.

அதே வேளையில், மேல்நாட்டின் வைத்தியத்தின் முதல்வர்களாக பபிலோனியர்களைக் கூறுவார்கள். இவர்களிலும் மூடநம்பிக்கைகள் ஏராளமாகக் காணப்பட்டன. உடலில் ஏற்படும் நோய்கள் கடவுளால் உண்டாக்கப் பட்டதாக மனிதன் நம்பினான். இதனால் மந்திரங்களால் நோய்களை மாற்ற முற்பட்டான். இதனால்தான் இன்று கூட வைத்தியசாலைகள் பெரும்பாலும் ஆலயங்களுக்கு அண்மையில் காணப்படுகின்றன. வைத்தியர்கள் பெரும்பாலும் மதத்தலைவர்களாகவே இருந்தனர்.

-தொடரும்-

# அகந்தை

அந்தக் காட்டில் யானைகள் அதிகமாக இருந்தன. அதனால் அந்தக் காட்டை யானைக்காடு என்று அழைக்கலாம் அல்லவா? அந்தக் காட்டில் யானைகள் கூட்டங்கூட்டமாக வாழ்ந்து வந்தன. ஒவ்வொரு யானைக் கூட்டத்திலும், தலைவன் யானைகள் இருந்தன.

ஒரு கூட்டத்தில் தலைவன் யானை மிகவும் பொல்லாத யானையாக இருந்தது. யானைகள் எல்லாவற்றையும் தன் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருந்தது. அவைகளைச் சுதந்திரமாக உலவக் கூட அது விடவில்லை. அதுவுமல்லாமல் தான் பெரியவன் என்னும் அகந்தையும் அதற்கு இருந்தது.

ஒரு சமயம் தலைவன்யானை ஆற்றில் இறங்கித் தண்ணீர் குடித்தது. "யானையாரே! கீழே நான் நிற்கிறேன். என்னை மிதித்து விடாதீர்கள். உங்களுக்குக் கோடி புண்ணியம் உண்டு." என்று குரல் கேட்டது. யானை குனிந்து பார்த்தது. கீழே தவளை ஒன்று நின்றது. யானை அது விலகிச் செல்லும் வரை

அசையாமல் நின்றது. தவளையும் அப்பால் தள்ளிச் சென்றது.

பின் யானையைப் பார்த்து, "யானையாரே, மெத்தப் பெரிய உபகாரம். நீங்கள் செய்த உதவிக்காக மிகவும் நன்றி. இதற்குப் பதிலாக நான் உங்களுக்கு உதவி செய்ய முடியுமானால்......., எப்போதாவது தேவைப்படலாம். அப்போது செய்து கொள்வேன்." என்று பணிந்து கூறியது. யானை பெரிதாகச் சிரித்துக் கொண்டது.


பின் "அற்பத் தவளை நீ, உன்னால் எனக்கு என்ன உதவி தேவைப்படப் போகின்றது. பிழைத்துப் போ." என்றது. தவளை திரும்பவும் நன்றி கூறி விட்டு, அந்த இடத்தை விட்டு அகன்றது. யானை மமதையுடன் ஏளனமாகச் சிரித்துக் கொண்டது. சில நாட்கள் சென்றன. யானை தன் கூட.டத்துடன் உணவு தேடி வாழைத் தோட்டம் ஒன்றில் நுழைந்தது.

தான் தலைவன் என்னும் அகந்தையோடு, யானைகளை வெளியேற்றி விட்டது. பின் வாழைத் தோட்டத்தை முற்றாகச் சேதப் படுத்தியது. பின் வெளியேறியது. அகந்தையுடன் நிமிர்ந்து நடந்த யானை, வழியில்


தோண்டியிருந்த பள்ளத்தைக் கவனிக்கவில்லை. மழைநீரினால் நிரம்பி சேறும் சகதியுமாய் இருந்த அந்தப் பள்ளத்தில் யானை இறங்கி விட்டது. அதிலிருந்து ஏறுவதற்கு அதனால் முடியவில்லை.

கால்கள் புதைந்து விட்டதால் யானையால் அசைய முடியவில்லை. உடம்பு விறைத்துப் போகும் நிலை ஏற்பட்டது. யானைகள் வெகுதூரம் சென்று விட்டிருந்தன. சத்தம் போட்டும் பலன் கிடைக்கவில்லை. அப்போது, "யானையாரே!" என்ற குரல் கேட்டுக் குனிந்து பார்த்தது. தவளை நின்றது. யானை தவளையைப் பார்த்து, "நீ சிறியவன். என்ன உதவியை எனக்குச் செய்யப் போகின்றாய்? நான் இப்படியே உடல் விறைத்து இறக்கப் போகிறேன்." என்று சொல்லி அழுதது.

தவளைக்கு யானையைப் பார்க்கப் பரிதாபமாக இருந்தது. உதவி ஏதும் செய்யாமல் இருந்தாலும், தன்னை யானை சாகாமல் காப்பாற்றியதாக அது நினைத்துக் கொண்டது. எனவே அதற்கு உதவி



செய்ய எண்ணியது. யானைக்காட்டுக்குள் நுழைந்தது. அங்கு தலைவன் இல்லாமல் திரிந்த யானைக்கூட்டத்தைக் கண்டது. அவைகளிடம் சென்று விஷயத்தைச் சொன்னது.



யானைகளில் ஒன்று தவளையைப் பார்த்துத் "தவளையாரே!, அவர் இறப்பது நல்லது. நாங்கள் நிம்மதியாக இருக்கிறோம். சுதந்திரமாக உலவிக் கொண்டிருக்கிறோம். இது உமக்குத் தெரியவில்லையா?" என்று அலட்சியமாகக் கூறியது. அதை மற்ற யானைகளும் ஆமோதித்தன. அதற்குத் தவளை எப்படிப்பட்ட ஆளாக இருந்தாலும் உங்கள் இனத்தவன் அல்லவா!. வேறு இனமாக இருந்தாலும், எனக்குத் தோன்றும் உணர்ச்சி

ஏன் உங்களுக்குத் தோன்றவில்லை. பகைவனாக இருந்தால் என்ன! வேறு இனத்தவனாக இருந்தாலென்ன! உயிர் ஒன்று தான். அந்த உயிராபத்து உங்கள் இனத்தவன் ஒருவனுக்கு ஏற்பட்டிருக்கிறது. அதை நினைக்க எனக்கு வெட்கமாக இருக்கிறது." என்றது.

அதைக் கேட்ட யானைகள் தங்களுடைய தவற்றை உணர்ந்தன. தவளை யானை ஒன்றின் முதுகில் ஏறிக் கொண்டு வழி காட்டியது. யானைகள் சென்று தலைவன் யானையைக் காப்பாற்றின. தவளைக்கு யானைத் தலைவன் நன்றி கூறியது. தான் தவளையை இகழ்ச்சியாக நினைத்ததற்காக, மன்னிப்புக் கேட்டுக் கொண்டது. அன்று முதல் தன் கூட்டத்துக்கு நல்ல தலைவனாக நடந்து கொண்டது.


++++++++++++++++++++++++++++++++++++++++
பெரிய பாறை மீது யாரும் மோதிக் கொள்வதில்லை. சிறிய கற்கள் தான் இடறி விழ வைக்கின்றன. -ஆபிரகாம் லிங்கன்-
++++++++++++++++++++++++++++++++++++++++

++++++++++++++++++++++++++++++++++++++++
நன்றாகப் பேசுவது நல்லது தான். ஆனாலும் நன்றாகச் செய்வது அதனிலும் நல்லது.
++++++++++++++++++++++++++++++++++++++++

Nektar für die Kinder

Nectar pour les enfants

Nectar for the childrens



உண்ண உணவின்றி,
உடுக்க உடையின்றி,
கல்வி அறிவின்றி,
யுத்தம், கலவரங்களால்,
இன்னலுறும் இளம்சிறார்களுக்கு
இச்சஞ்சிகையைக்
காணிக்கையாக்குகின்றோம்.

புனிதமலர் ராஜேஸ்வரன்

"Siruvar Amutham"
Alefstr- 11
50189 Elsdorf
GERMANY
02271 / 66527